www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

இரண்டாம் இடைப் பருவத் தேர்வு – நவம்பர் 2024
விலங்கியல்

வகுப்பு : 12 தேர்வு எண் :

நேரம் : 1.30 மணி மதிப்பெண் : 35

I. கீழ்காணும் வினாக்களுக்கு சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 8×1=8

1. சிற்றினங்களுக்கிடையே போட்டி காரணமாக ஏற்படுவது
   அ. உயிரின மறைவு ஆ. திடீர்மாற்றம்
   இ. உதவிபெறும் வாழ்க்கை ஈ. பகிர்ந்து வாழும் வாழ்க்கை
2. குறைவான வெப்பநிலையில் அதிக எண்ணிக்கையில் முதுகெலும்புகள் உருவாக்கப்படுகின்றன என்பது
   அ. ஆலென் விதி ஆ. பெர்க்மானின் விதி இ. ஜோர்டானின் விதி ஈ. வான்ட்ஹாஃப் விதி
3. குளிர்கால உறக்கம் மற்றும் கோடைக்கால உறக்கம் கீழ்க்கண்ட எந்த ஓர் தகவமைப்புக்கு எடுத்துக்காட்டாகும்
   அ. உடல் அமைப்பு சார்ந்த தகவமைப்பு ஆ. நடத்தை சார்ந்த தகவமைப்பு
   இ. மரபியல் சார்ந்த தகவமைப்பு ஈ. உடற்செயலியல் சார்ந்த தகவமைப்பு
4. கீழ்க்கண்டவற்றுள் r-தேர்வு சிற்றினத்திற்கு உதாரணம்
   அ. பூச்சிகள் ஆ. மனிதன் இ. காண்டாமிருகம் ஈ. திமிங்கலம்
5. ELISA முதன்மையாக இதற்கு பயன்படுகிறது
   அ. திடீர்மாற்றங்களை கண்டறிய ஆ. நோய்கிருமிகளை கண்டறிய
   இ. விரும்பத்தக்க விலங்கினை தேர்வு செய்ய
   ஈ. விரும்பத்தக்க தாவரங்களை தேர்வு செய்ய
6. டாலி எனும் செம்மறி ஆடு உருவாக்கப்பட்ட தொழில்நுட்பம்
   அ. ஜீன் மாற்றியமைப்பு நகலாக்கம் ஆ. இனச்செல்கள் உதவியின்றி நகலாக்கம்
   இ. உடல் செல்கள் திசு வளர்ப்பு நகலாக்கம் ஈ. உட்கரு மாற்றியமைப்பு நகலாக்கம்
7. தண்டுசெல்கள் ஒரேயொரு செல்வகையாக மட்டும் வேறுபாடடையும் திறன்
   அ. குறுதிறன் ஆ. ஒற்றைத்திறன் இ. பகுதித்திறன் ஈ. பல்திறன்
8. ஆல்ஃபா லேக்டா அல்புமின் என்பது
   அ. 123 அமினோ அமிலம் 2 டை சல்பைடு இணைப்பு
   ஆ. 321 அமினோ அமிலம் 4 டை சல்பைடு இணைப்பு
   இ. 123 அமினோ அமிலம் 4 டை சல்பைடு இணைப்பு
   ஈ. 321 அமினோ அமிலம் 2 டை சல்பைடு இணைப்பு

II. எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளி. 4 x 2 =8

9. விலங்கு நகலாக்கத்தின் நன்மைகள் ஏதேனும் இரண்டு தருக.
10. இன்டர்பெரான்கள் என்றால் என்ன?
11. தண்டுசெல் வங்கிகள் குறிப்பு வரைக.
12. பிறப்பு வீதம் என்றால் என்ன?
13. குறை வெப்ப வேறுபாட்டு உயிரிகள் என்றால் என்ன? எடுத்துக்காட்டு தருக.
14. செயலற்ற நிலை என்றால் என்ன?

III. எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி. 3x3=9

15. மண்ணின் முக்கிய பணிகள் மூன்றினைத் தருக.
16. J வடிவிலான வளர்ச்சி வடிவம் பற்றி குறிப்பு தருக.
17. வேறுபடுத்துக. உடற்செல் மரபணு சிகிச்சை, இனச்செல் மரபணு சிகிச்சை.
18. DNA தடுப்பூசிகள் என்பவை யாவை?
19. காப்புரிமை பெற தேவையான அடிப்படைத் தகுதிகள் யாவை?

IV. கீழ்காணும் வினாவிற்கு விரிவான விடையளி. 2x5=10

20. PCR தொழில்நுட்பத்தின் பயன்பாடுகள் யாவை?
    (அல்லது)
    r-தேர்வு, k-தேர்வு சிற்றினங்களுக்கு இடையே உள்ள வேறுபாடுகள் யாவை?
21. நீரில் வாழும் விலங்குகளின் தகவமைப்புகள் யாவை?
    (அல்லது)
    நகலாக்க செம்மறி ஆடு – டாலி ஒரு மிகப்பெரிய அறிவியல் திருப்புமுனை என்பதை விளக்குக.

Scanned with OKEN Scanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com